## இசைவாக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணயச் சபை 2010

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இசைவாக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தரநிர்ணயச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இசைவாக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தரநிர்ணயச் சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை (இ.க.நி)

பின்வரும் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | |
|---|---|
| (அ) இ.க.நி - 1 | ரூபா 275,642 தொகையான அபிவிருத்திக் கிரயமானது உரிய பொருளாதார நலன்கள் இனங்காணப்பட்ட வகைக்கு இணங்க முறையான அடிப்படையில் காலக்கழிவு செய்து செலவு ஒன்றாக இனங்காணப்படவில்லை. |

(ஆ) இ.க.நி - 3 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று ஒன்று நிதிக்கூற்றுக்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி - 3 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் என்பன தரவு ரீதியாக தனித்தனியாக அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தொழில்சார் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 108,500 தொகையான வருமானம் தொழில்சார் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்களின் சொத்துக்கள் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டு பொருத்தமற்ற முறையில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

## 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டில் செலுத்தப்பட்ட மீளாய்வாண்டிற்குரிய ரூபா 52,483 தொகையான செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகளாக கணக்குகளுக்கு கொண்டுவரப்படாது முற்பணக் கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 217,778 தொகையான பசுபிக் தர நிர்ணய மன்றத்திற்கான பங்களிப்பு ஆசியா பசுபிக் ஆய்வுகூட தரநிர்ணயக் கூட்டுத்தாபனத்திற்கான (APLAC) பங்களிப்பாக பொருத்தமற்ற முறையில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்ள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1996 ஏப்ரல் 20 ஆந் திகதிய எம்எப்/6/1/1/96 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சு சுற்றுநிருபத்தின் 2:1:4 ஆம் பந்தி | 4 உத்தியோகத்தர்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 122,937 தொகையான சிறு செலவுப் படிகளுக்கான முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2007 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றுநிருபத்தின் 10.9 மற்றும் 10.10 ஆம் பிரிவுகள் | 4 உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயணத்திற்காக பொது 126 படிவத்தின் மூலம் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை விபரத்தின் பிரதி ஒன்று வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்கத்தின் நல்ல ஆளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.5 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களை உள்ளடக்கும் வகையில் காப்புறுதி முறைமை ஒன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றுநிருபத்தின் 9 ஆம் பந்தி | அனைத்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளும் தமது நிறுவனம் தொடர்பாக காலாண்டிற்கு ஒரு முறை உள்ளகக் கணக்காய்வு அறிக்கையினைத் தயாரிக்க வேண்டிய போதிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14:4 ஆம் பிரிவு | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதிய எம்ஓஎப்பீ/01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சு சுற்று நிருபத்தின் 3 ஆம் பிரிவு | வெளிநாட்டு நிறுவனத்தினால் படிகள் செலுத்தப்பட்டிருந்தும் ஒரு உத்தியோகத்தருக்கு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான இடைநேர் செலவுப்படியாக ரூபா 14,065 செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 2 ஆம் பந்தி | சேமலாப நிதியினைக் கணிக்கும் போது சீவனோபாய படிகள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாததன் காரணமாக சேமலாப நிதியத்தின் பங்களிப்பு ரூபா 77,019 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஏ) | 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் 2 ஆம் பந்தி | ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பினைக் கணிக்கும் போது சீவனோபாய படிகள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாததன் காரணமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா 15,404 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 8,910,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் இசைவாக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணயச் சபையின் செயற்பாடுகள் ரூபா 359,485 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 11,470,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் அந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 588,716 மிகையாக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 948,201 ஆல் குறைவு ஒன்றினை எடுத்துக்காட்டியுள்ளது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான இலக்கிடப்பட்ட செயலாற்றலும் உள்ளபடியான செயலாற்றலும் கிழே தரப்படுகின்றன.

| (அ) இலக்கிடப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் |
|---|---|
| 10 மருத்துவ ஆய்வுகூடங்கள், 05 சான்றுபடுத்தும் நிறுவனங்கள், 10 ஆய்வுகூட பரிசோதனை நிறுவனங்கள் என்பவற்றினை தர நிர்ணயத்திற்கு உட்படுத்துதல் | 01 சான்றுபடுத்தும் நிறுவனமும் 10 ஆய்வுகூட பரிசோதனை நிறுவனங்களும் மாத்திரம் தர நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. |
| 12 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் 240 தனிப்பட்டவர்களையும் பயிற்றுவித்தல் | 01 பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் 19 தனிப்பட்டவர்களையும் மாத்திரம் பயிற்றுவித்தல். |

பரிசோதனை நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
நடைமுறைக் கையேட்டினை
அங்கீகரித்துக்கொள்ளல்

(ஆ) நிறுவனத்தின் தொடக்கத்திலிருந்து மீளாய்வாண்டு வரை பரிசோதனை நிறுவனம் (Inspection Bodies) தர நிர்ணயத்திற்கு உள்ளாகியிருக்காததுடன் தகைமையுள்ள 11 மதிப்பீட்டாளர்களைக் கொண்ட குழு ஒன்று சபையில் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டிற்காக தர நிர்ணயம் வழங்கப்பட்ட எம்எல்-03-01 மற்றும் எம்எல்-06-01 ஆம் இலக்க மருத்துவ ஆய்வுகூடங்களுக்காக (Medical Laboratories) முதலாவது கூடுதல் மேற்பார்வை பரிசோதனை (First Surveilliance) இடம் பெற்றிருக்கவில்லை. பரிசோதனை தாமதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமை இதற்கான காரணமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 பாதீட்டுக்கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கூட்டிணைந்த திட்டம்

---

நிறுவனத்தினால் 2009-2013 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிகழ்காலப் போக்கினைக் கவனத்தில் கொண்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான பகுதிகளாகிய நுணக்கமான பகுப்பாய்வு, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு, 2009 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) தரநிர்ணயத்தினை வழங்குதல்

(இ) வெளிநாட்டுப் பயணம்

(ஈ) வாகனப் பயன்பாடு